கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் 162/2020

வாதி தரப்பு சாட்சி-2 மகாலிங்கம் திருமதி.ஏ.பிரமோ பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 19.08.2024 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மகாலிங்கம் | கிராமம் | |
| த/பெ / க/பெ. | மலையாளம் | தொழில் | |
| தாலுக்கா | | மதம் | |
| ஜாதி | | வயது | 66 |

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் நெய்தலூரில் இருந்து குளித்தலை வந்து குடியேறி 25 வருடங்கள் ஆகிறது. வாதி எனது உறவினரா என்றால் ஆமாம். வாதி 1ம் பிரதிவாதியிடம் கடன் வாங்கியது போது நான் உடன் இருந்தேனா என்றால் இல்லை. வாதி சொல்லி தான் தெரியும். வாதி 1ம் பிரதிவாதி கடனை திருப்பி செலுத்தியது சம்மந்தமாக ஏதேனும் சொன்னாரா என்றால் இல்லை. வாதி கடன் எதுவும் பெறவில்லை என்றும், அவர் 1ம் பிரதிவாதியின் தந்தைக்கு தாவா சொத்துக்களை கிரையம் தான் செய்து கொடுத்தார் என்றால்சரிய்லல. வாதி தற்போது சுவாதீனத்தில் இருக்கிறார். தாவா சொத்தின் சர்வே எண்.280/3A. தாவா சொத்தின் நான்கு எல்லைகள் தெரியுமா என்றால் சரியாக தெரியவில்லை.

2. நான் தாவா சொத்திற்கு சென்றதில்லை என்றும், மேற்படி சொத்தை பொறுத்து எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி தான் தாவா சொத்தின் சுவாதீனத்தில் இருக்கிறார் என்றால் சரியல்ல. வாதி தான் இருக்கிறார். வாதிக்கும் 1ம் பிரதிவாதியின் தகப்பனாருக்கும் எந்த பஞ்சாயத்தும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் சென்றிருந்தேன். அந்த பஞ்சாயத்தில் எந்த வித முச்சலிக்காவும் 1ம் பிரதிவாதியின் தந்தை எழுதி கொடுக்கவில்லை என்றால் இல்லை. தாவா சொத்து 1ம் பிரதிவாதியின் அனுபவத்தில் தான் உள்ளது என்றும், நான் வாதியின் ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R.தமிழரசி

**Additional District Munsif,**
Kulithalai.